முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2021 சனவரி

## (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2021-03-21
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) ***2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க வருமான வரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் வரிமதிப்பாண்டு 2019/20 முழுவதும் எவ்வித திருத்தங்களுமின்றி நிலவியது எனக் கொள்க.***

(8) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**ஜிஹான்** என்பவர் ஒரு இலங்கைப் பிரஜையாவார். அவர் தனது மகளின் உயர் படிப்புக்காக 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதி கனடா நாட்டிற்குக் குடிபெயர்நதார். எவ்வாறாயினும், அவரது மகளின் பல்கலைக்கழகத்தின் பருவ விடுமுறை (vacation) காரணமாக 2020 மார்ச் 15 இல் அவர் இலங்கைக்குத் திரும்பியிருந்ததுடன் 2020 மார்ச் 31 இல் அவர் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வரிமதிப்பாண்டு 2019/20 இற்கான இலங்கையின் வரிவிதிப்பு நோக்கத்திற்காக **ஜிஹானின்** வதிவிட அந்தஸ்தை (resident status) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 02

காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக வருமான வரி செலுத்துகின்ற ஒரு வதிவுள்ள தனியாளுக்கு ஒவ்வொரு வரிமதிப்பாண்டிற்குமான காலாண்டு வருமான வரியைக் கணிப்பிட வேண்டியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளுக்கான உரிய திகதிகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) செலுத்தத் தவறிய வரி (tax in default) என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.**
(02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட ஷம்ஸ் டிரேடிங் (தனி.) கம்பனியின்** VAT பதிவு 2020 சனவரி 01 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதனால் அதன் வரிவிதிக்கத்தக்க வழங்கல்களின் பெறுமதி VAT பரிப்பின் தொடக்க எல்லையைத் தாண்டாது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2020 சனவரி 01 இலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்குநர்கள் மீது ஆண்டொன்றிற்கான VAT பரிப்பின் தொடக்க எல்லையைக் (threshold) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) VAT பதிவு இரத்துச் செய்யப்பட்டதன் மீதான **வரையறுக்கப்பட்ட ஷம்ஸ் டிரேடிங் (தனி.) கம்பனியின்** பொறுப்புக்கள் (responsibilities) மூன்றைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட X கம்பனி** மருந்தக வியாபாரம் ஒன்றில் ஈடுபட்டுள்ளது. 2020 சனவரியில் இடம்பெற்ற திருட்டு காரணமாக கம்பனி ரூபா 600,000/- காசு இழப்பினைச் சந்தித்தது. அதனைத் தொடர்ந்து பொலிசாரினால் ரூபா 100,000/- மீளளிப்புச் செய்யப்பட்டதுடன் 2020 மார்ச் இல் காப்புறுதிக் கம்பனி யிடமிருந்து உரிமை கோரல் தொகை (claim) ரூபா 200,000/- கிடைக்கப் பெற்றது. கம்பனியானது வருமான வரிப் பரிப்பைக் கணிப்பிடும்போது, நிகர இழப்பான ரூபா 300,000/- இனை அனுமதிக்கத்தக்க செலவினம் ஒன்றாக உரிமை கோரியிருந்தது. எவ்வாறாயினும், உதவி ஆணையாளர் அந்தத் தொகையை அனுமதித்திருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

*"Hayley & Co. Ltd. எதிர் CIR"* இன் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பினை மேற்கோள் காட்டி, நிகர இழப்புத் தொகை ரூபா 300,000/- இனை வரி நோக்கத்திற்காக அனுமதிக்கத்தக்க செலவினம் ஒன்றாகக் கருத முடியுமா என்பதை **விவரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**ஹப்பி டீல்ஸ்** என்பது வீட்டில் தயாரிக்கப்பட்ட மசாலாப் பொருட்களை நாடு பூராகவும் விநியோகிப்பதற்காக **ரவி** மற்றும் அவரது நண்பர் **திலும்** ஆகியோரால் உருவாக்கப்பட்ட ஒரு பங்குடமை வியாபாரமாகும். **ரவியும் திலுமும்** இலாப, நட்டங்களை சமமாகப் பங்கிடுவதற்கு இணங்கியுள்ளனர். 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின்படி, பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 1,850,000/- ஆக இருந்தது.

பின்வரும் தகவல்கள் பங்குடமையின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்:

(1) நிகர இலாபத்தைத் பெறும்போது பின்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டுள்ளன :

| | **ரூபா** |
|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் (பங்காளர்களின் சம்பளங்கள் உட்பட) | 5,700,000 |
| வாகன வாடகைக் கட்டணங்கள் | 960,000 |
| தேய்மானம் – விநியோக லொறி (2018/19 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 420,000 |
| வாடகை | 240,000 |

(2) **ரவியும் திலுமும்** முறையே ரூபா 80,000/- மற்றும் ரூபா 100,000/- இனை மாதாந்தச் சம்பளமாகப் பெறுகின்றனர்.

(3) வியாபாரமானது **திலுமிற்குச்** சொந்தமான கட்டடம் ஒன்றில் முன்னெடுக்கப்படுவதுடன், அதற்கான வாடகையாக மாதமொன்றுக்கு ரூபா 20,000/- வீதம் அவருக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

(4) மசாலாப் பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதற்காக வாகன வாடகை கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன.

(5) மோட்டார் லொறியும்கூட மசாலாப் பொருட்களின் விநியோகத்திற்குப் பயன்படுத்தப்படுவதுடன் அதன் கிரயம் ரூபா 3,000,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

வரிமதிப்பாண்டு 2019/20 இற்காக பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(a) வரி நோக்கத்திற்காக பங்குடமை வருமானம் (03 புள்ளிகள்)

(b) பங்குடமையால் செலுத்தப்பட வேண்டிய நிறுத்திவைத்தல் வரி (02 புள்ளிகள்)

(c) ஒவ்வொரு பங்காளரினதும் பங்குடமை வருமானத்தின் பங்கு (03 புள்ளிகள்)

(d) ஒவ்வொரு பங்காளருக்கும் கிடைக்கக்கூடிய நிறுத்திவைத்தல் வரி வரவு (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(A) **வரையறுக்கப்பட்ட காயா டிரேடிங் (தனி.) கம்பனி** என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இந்தக் கம்பனி வரிமதிப்பாண்டு 2018/19 இற்கான வருமான வரித் திரட்டினை இன்னும் சமர்ப்பித்திருக்கவில்லை. உதவி ஆணையாளர் தனது தீர்மானத்தின் அடிப்படையிலான வரி மதிப்பீடு ஒன்றினை வழங்கியுள்ளார். இந்த வரிமதிப்பீட்டு அறிவித்தல் திகதி 2020 யூன் 30 ஆகும். **வரையறுக்கப்பட்ட காயா டிரேடிங் (தனி.) கம்பனி**யின் வரி ஆலோசகர் நீங்கள் ஆவீர்கள்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) வரிமதிப்பாண்டு 2018/19 இற்கான வருமான வரித் திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) வரி மதிப்பீட்டு அறிவித்தலில் உள்ளடக்கப்பட வேண்டிய நான்கு (04) உருப்படிகளைப் (items) **பட்டியலிடுக.** (04 புள்ளிகள்)

(B) **சரத்** என்பவர் ஒரு வதிவுள்ள தனியாள் ஆவார். அவர் 2016 டிசெம்பர் 01 இல் ஹெரணை என்ற இடத்தில் ரூபா 36 மில்லியனுக்கு கொள்வனவு செய்த 1 ஏக்கர் காணிக்குச் சொந்தக்காரர் ஆவார். அவர் இந்தக் காணியை 2019 யூன் 30 இல் ரூபா 48 மில்லியனுக்கு விற்பனை செய்ததுடன், தரகருக்கான கொடுப்பனவாக ரூபா 130,000/- ஐச் செலுத்தியுள்ளார். 2017 செப்ரெம்பர் 30 இல் இந்தக் காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 40 மில்லியனாக இருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்படி கொடுக்கல் வாங்கல் மீது செலுத்த வேண்டிய மூலதன நயம் மீதான வரியை (capital Gain tax) **மதிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட குஷ்பு மலர்கள் கம்பனியானது** பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனியாகும். இது சோடனைத் (decoration) தொழில்துறையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் கம்பனி நுவரெலியாவில் தமக்குச் சொந்தமாக ஒரு மலர்ப் பண்ணையைப் பராமரிக்கிறது. 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள், கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன :

(1) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டில் இடம்பெற்ற விற்பனைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன (VAT தவிர்ந்த):

| | **ரூபா** |
|---|---|
| வழங்கப்பட்ட சேவைகளிலிருந்தான வருமானம் | 85,750,000 |
| மலர்களின் விற்பனையிலிருந்தான வருமானம் | 12,250,000 |

(2) கம்பனியானது காலாண்டில் பின்வரும் உள்ளீட்டு வரியைச் செலுத்தியுள்ளது :

| | **ரூபா** |
|---|---|
| மலர்ப் பண்ணை தொடர்பான செலவினங்கள் மீது | 163,500 |
| சோடனைப் பொருட்களின் கொள்வனவின் மீது | 3,435,000 |
| இரு வியாபாரங்களுக்குமான பொதுவான செலவினங்கள் மீது | 448,000 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT ரூபா 160,000/-.

(4) மாதாந்த VAT தவணைக் கட்டணங்களாக கம்பனி ரூபா 2,000,000/- இனைச் செலுத்தியுள்ளது.

*(நியம VAT வீதத்தை 8% ஆகக் கருதுக.)*

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதி சேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2017 சனவரி 01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட **வரையறுக்கப்பட்ட SRI புரொடெக்ற்ஸ் (தனி.) கம்பனியானது** தனது வியாபாரச் செயற்பாடுகளையும் அதே நாளிலேயே ஆரம்பித்திருந்தது. இக்கம்பனி குழந்தைகளுக்கான ஆடைகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளது.

பின்வரும் தகவல்கள் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட SRI புரொடெக்ற்ஸ் (தனி.) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) சகல செலவினங்களும் தாக்கல் செய்யப்பட்டு சகல வருமானங்களும் வரவிடப்பட்டதன் (crediting) பின்னரான 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முந்திய நிகர இலாபம் ரூபா 33,650,000/- ஆக இருந்தது. 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மொத்தப் புரள்வு ரூபா 634,400,000/- ஆக இருந்தது.

(2) பிற வருமானங்களின் கூறுகள் பின்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| பங்கிலாப வருமானம் - WHT இன் நிகர | 301,000 |
| இயந்திர விற்பனை மீதான இலாபம் | 168,000 |
| | **469,000** |

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு :

**கிரயம்**

| சொத்து | 2019.04.01 இல் மீதி (ரூபா) | சேர்ப்பனவுகள் (ரூபா) | விற்பனைகள் (ரூபா) | 2020.03.31 இல் மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| காணி | 8,000,000 | - | - | 8,000,000 |
| கட்டடம் | 10,000,000 | - | - | 10,000,000 |
| இயந்திரம் | 8,210,000 | | 2,460,000 | 5,750,000 |
| மோட்டார் லொறிகள் | 2,465,000 | 1,350,000 | - | 3,815,000 |
| அலுவலக உபகரணம் | 867,000 | - | - | 867,000 |
| கணினிகள் | 1,850,000 | - | - | 1,850,000 |
| கணினி மென்பொருள் | - | 1,200,000 | - | 1,200,000 |
| | **31,392,000** | **2,550,000** | **2,460,000** | **31,482,000** |

- வரிமதிப்பாண்டு 2017/18 காலப்பகுதியில் ரூபா 2,460,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட தொழில்நுட்ப வழுக்கள் காரணமாக, அது 2019 யூன் மாதத்தில் ரூபா 750,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது.
- 4 ஆண்டுகள் காலப்பகுதிக்கான நிதிக் குத்தகை உடன்படிக்கையின் கீழ், 2019 மே 01 ஆந் திகதி மோட்டார் லொறியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. குத்தகைக்கான மாதாந்தத் தவணைக் கொடுப்பனவு ரூபா 34,000/- ஆக இருப்பதுடன் ஆண்டின்போது 11 தவணைக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன.
- ஆண்டின்போது ரூபா 1.2 மில்லியனுக்கு கம்பனியால் கணினி மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் பயன்தரும் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் என கம்பனி மதிப்பிட்டுள்ளது.
- இயந்திர விற்பனை தவிர்ந்த, ஏனைய சகல சொத்துக்களும் வரிமதிப்பாண்டு 2018/19 காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டவை ஆகும்.

(4) நிருவாகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- ஆண்டிற்கான தேய்மான அறவீடு ரூபா 6,242,000/-.
- இடம்பெயர்ந்த முதியோருக்கான காப்பகம் ஒன்றை நடத்திச் செல்கின்ற அங்கீகரிக்கப்பட்ட ஒரு தரும ஸ்தாபனத்திற்கு கம்பனி ரூபா 1,000,000/- நன்கொடை வழங்கியிருந்தது.
- மேலும், கோவிட் – 19 நோயாளர்களின் நன்மைக்காக அரசாங்க வைத்தியசாலையான IDH வைத்தியசாலைக்கு ரூபா 1,000,000/- பெறுமதியான மருத்துவ உபகரணம் நன்கொடையாக வழங்கப்பட்டது.
- வரிமதிப்பாண்டு 2019/20 இற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 1,563,000/-.

(5) விநியோகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- களியாட்டச் செலவுகள் ரூபா 234,000/- ஆகும். இது வியாபாரப் பேச்சுவார்த்தைகளுக்காக வருகை தந்த வாடிக்கையாளர்களைக் களிப்பூட்டுவதற்காக செலவு செய்யப்பட்டதாகும்.
- கம்பனியானது வெளிநாட்டு ஊடகத்தில் விளம்பரம் செய்வதற்காக ரூபா 1,450,000/- இனைச் செலவு செய்திருந்தது.
- வெளிநாட்டு வழங்குநர்களைச் சந்திப்பதற்கான பணிப்பாளர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்கு ரூபா 800,000/- செலவிடப்பட்டது.

(6) நிதிச் செலவுகள், ஆண்டின்போது பெறப்பட்ட நிதிக் குத்தகை மீது செலுத்திய குத்தகை வட்டி ரூபா 196,000/- இனை உள்ளடக்கியுள்ளது.

(7) கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

- கம்பனியானது நடப்பு ஆண்டிற்கான பொருளாதார சேவைகள் கட்டணமாக (ESC) ரூபா 1,180,000/- இனைச் செலுத்தியுள்ளது.
- வரிமதிப்பாண்டு 2019/20 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவு களாக கம்பனி ரூபா 5,000,000/- இனைச் செலுத்தியுள்ளது.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

வரிமதிப்பாண்டு 2019/20 இற்கு **வரையறுக்கப்பட்ட SRI புரொடெக்ற்ஸ் (தனி.) கம்பனியின்** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக.**

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்தவேண்டிய மீதி வரி

*(மு.கு.: ஏதேனும் செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

தொழில்முறை ரீதியில் வழக்கறிஞர் ஒருவராக இருக்கின்ற **காமினி** அவர்கள் ஒரு வதிவுள்ள தனியாள் ஆவார். அவர் இலங்கையிலுள்ள நிதிக் கம்பனி ஒன்றில் சட்ட அலுவலராகப் பணியாற்றுகிறார்.

வரிமதிப்பாண்டு 2019/20 (*இதன் பின் 'ஆண்டு' எனக் குறிப்பிடப்படும்*) இற்கான அவரது வருமானம் தொடர்பில் பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) ஊழியத்திலிருந்தான (Employment) வருமானம்:

- மொத்தச் சம்பளம் - மாதாந்தம் ரூபா 325,000/-.
- பயணப் படி (travelling allowance) – மாதாந்தம் ரூபா 50,000/-.
- முன்னைய ஆண்டின் இலாபத்திலிருந்து 2019 ஏப்ரலில் கிடைக்கப்பெற்ற உபகாரக் தொகை (bonus) ரூபா 300,000/-.
- 2019 மே மாதத்தில், கம்பனியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, சர்வதேச செயமர்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக அவர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இந்தப் பயணத்திற்கான செலவு ரூபா 120,000/- கம்பனியால் மீளளிக்கப்பட்டது (reimbursed).
- அவர் ஒரு வாடகை வீட்டில் வசிப்பதுடன் இதற்கான மாதாந்த வாடகையான ரூபா 35,000/- ஆனது தொழில்தருநரால் மீளளிக்கப்படுகிறது.
- ஆண்டிற்காகக் கழிக்கப்பட்ட PAYE தொகை ரூபா 604,800/-.

(2) **காமினி,** ஆலோசனை சேவைகளை வழங்குகின்ற தனது சொந்த வியாபாரத்தினை 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி ஆரம்பித்தார். 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கணக்கின் பொழிப்பு கீழே தரப்படுகிறது :

| | **ரூபா** | | **ரூபா** |
|---|---:|---|---:|
| ஊழியர்களுக்கான சம்பளங்கள் | 225,000 | வருமானம் | 2,844,000 |
| மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் | 27,000 | | |
| தேய்மானம் | 126,000 | | |
| ஏனைய செலவினங்கள் | 143,000 | | |
| நிகர இலாபம் | 2,323,000 | | |
| | **2,844,000** | | **2,844,000** |

- 2020 சனவரியில் வியாபாரத்திற்கு ரூபா 400,000/- பெறுமதியான அலுவலக உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. மூலதன விடுதொகைகள் (capital allowances) கோரக்கூடிய வேறு எவ்வித தகைமைச் சொத்துக்களும் இல்லை.
- ஏனைய சகல செலவினங்களும் வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கத்தக்கவை ஆகும்.

(3) **காமினி** கொழும்பில் உள்ள ஒரு வாடகை வீட்டில் வசிக்கிறார். அவரது சொந்த வீடு இரத்தினபுரியில் இருப்பதுடன் அவ்வீடு குடும்பம் ஒன்றிற்கு மாதாந்த வாடகை ரூபா 25,000/- இற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

(4) **காமினி** வர்த்தக வங்கி ஒன்றில் நிலையான வைப்பொன்றைப் பேணுவதுடன், இந்த வைப்பு மீதான ஆண்டிற்கான வட்டி ரூபா 132,000/- ஆகும். வங்கியானது வட்டி மீது நிறுத்திவைத்தல் வரியைக் கழித்துள்ளது.

(5) **காமினி** விலைகோரப்பட்ட (Quoted) பொதுக் கம்பனி ஒன்றில் 2018 யூலை 01 ஆந் திகதி ரூபா 5 மில்லியன் கிரயத்தில் பங்குகளைக் கொள்வனவு செய்துள்ளார். அவர் அப்பங்குகளை 2019 மே இல் ரூபா 6 மில்லியனுக்கு விற்பனை செய்துள்ளார். அவர் 2019 ஏப்ரலில் ரூபா 243,000/- இனை நிகர பங்கிலாபமாகப் பெற்றுள்ளார்.

(6) ஆண்டின்போது ரூபா 500,000/- பெறுமதியான உபகரணத்தை சுகாதார அமைச்சுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

(7) **காமினி** வரிமதிப்பாண்டு 2019/20 இற்கான வருமான வரித் தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 100,000/- இனைச் செலுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

வரிமதிப்பாண்டு 2019/20 இற்கு **காமினிக்காக** பின்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின். (25 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |